இலங்கை கரப்பந்தாட்ட் சம்மேளனம் - 2021

--------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியள்ள அபிப்பிராயம்

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து , சம்மேளனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழிவுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின்

பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சம்மேளனத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக கொள்வதற்காகவேயன்றி சம்மேளனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சம்மேளனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சம்மேளனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சம்மேளனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சம்மேளனம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபைக்கு 2021 திசெம்பர் 31 இல் ரூபா 987,449 செலுத்த வேண்டியுள்ள போதிலும் அதிகாரசபையால் வழங்கப்பட்ட மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் அது ரூபா 3,176,662 ஆக இருந்தமையால் ரூபா 2,189,213 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அவ் வேறுபாட்டிற்கு காரணம் கண்டுபிடிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய மீதி தீர்க்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மற்றும் உரிய வேறுபாடு தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | செலுத்த வேண்டிய மீதிகளின் சரியான தன்மை பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தல் தகவல்களின் பிரகாரம் அம் மீதி சரியாக சீராக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த வருடத்தில் பாடசாலை கரப்பந்தாட்டப் போட்டிச் செலவுகள் தீர்க்கப்படுவதற்காக அனுசரணை நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 5.8 மில்லியன் ஆன பங்களிப்பு அப் போட்டிகள் நடாத்தப்படாமையால் அட்டுறு செலவொன்றாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கீட்டு வழுவைத் திருத்துவதற்காக மீளாய்வாண்டில் அட்டுறு செலவில் குறைக்கப்பட்டு கடந்த வருடத்தின் திரண்ட மிகையுடன் கூட்டப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டில் முன் கொண்டு வரப்பட்டிருந்த திரண்ட மிகை மீதி ரூபா 5.8 மில்லியன் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டது. அத்துடன் 2022 ஆம் வருடத்தில் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்ட மேற்படி போட்டிகளுக்காக இந் நன்கொடைத் தொகையில் செய்யப்பட வேண்டிய செலவுகளுக்கான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிக் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் வருடத்தில் DSI கரப்பந்தாட்ட போட்டிகளை நடாத்துவதற்கு Covid 19 காரணத்தால் நடவடிக்கைகள் எடுக்கபடாமையுடன் உரிய வருடத்தில் வருமானத்திற்கு எடுக்கப்படாமை தொடர்பான கணக்காய்வு விசாரணை அனுப்பபட்டிருந்தமையால் 2021 ஆம் வருடத்தில் கணக்குகளில் கடந்த வருட சீராக்கமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் வருடத்தின் யூன் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் போட்டிகளை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டியமை. |

### 1.5.2 செலுத்த வேண்டிய கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சம்மேளனத்தினால் 08 வருட காலமாக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு மற்றும் சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கிற்கு செலுத்த வேண்டிய முறையே ரூபா 2,000,000 மற்றும் ரூபா 987,449 என்பன தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.. | செலுத்த வேண்டிய தொகை விரைவில் தீர்க்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) ஒரு வருடம் தொடக்கம் நான்கு வருடங்கள் வரையான காலப் பகுதிக்குரிய செலுத்த வேண்டிய ரூபா 227,709 ஆன கணக்காய்வுக் கட்டணம் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்ககப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் கட்டணம் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,862,514 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,332,106 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,530,408 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு வருமானம் ரூபா 46,346,632 ஆல் அதிகரித்தமை மற்றும் அதனுடன் ஒப்பிடும்போது செலவுகள் ரூபா 48,877,040 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் திரண்ட நிதியம் 04 வருடங்களில் ரூபா 7,211,274 ஆல் குறைவடைந்திருந்ததுடன் மொத்தச் சொத்துக்களுடன் ஒப்பிடும் போது திரண்ட நிதியத்தின் மறை மீதி 116 சதவீதமாகும். மேலும் சம்மேளனம் 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களில் நடைமுறை விகிதம் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்கள் 1 இற்கு நடைமுறைப் பொறுப்புக்கள் 15.9 ஆக விரைவுத் தன்மைக்கு பாதகமாக காணப்பட்டது. அது சம்மேளனத்தை தொடர்ந்து நடாத்திச் செல்வதில் பாரிய தாக்கமொன்றை ஏற்படுத்தியுள்ளமை | எதிர்வரும் வருடத்தில் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு பெறுகைத் திட்டமொன்றை தயாரிக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைத் திட்டமொன்றை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அவதானிக்ககப்பட்டது. இது தொடர்பாக கட்டுப்பாட்டுச்சபை போதியளவு கவனமொன்று எடுத்திருக்கவில்லை. | | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஒருங்கிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்கத்தின் 7(xi) ஆம் இலக்க கட்டளையின் பிரகாரம் ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் வருடத்தில் ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படுவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | தேசிய விளையாட்டு சங்கத்தின் கட்டளைகளின் பிரகாரம் ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

**4.2 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் சம்மேளனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்வது தொடர்பில் கட்டுப்பாட்டுச் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் மாதாந்தம் நடாத்தப்படுகின்ற நிறைவேற்றுக்குழுக் கூட்டங்களில் மாதாந்த நிதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் தனியான உள்ளக கணக்காய்வு பிரிவொன்று நிறுவுவதற்காக நிறைவேற்றுக் குழுவின் கவனம் கோரப்படும். | சம்மேளனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளக கணக்காய வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |